

# யார் பொறுப்பு யார்? யார்?

வெளியீடு:
பிரச்சாரத் துறை,
தி.மு.க. தலைமை நிலையம்.

63 ப.க
5368
10,185

# யார் பொறுப்பு யார்? யார்?

## கழகத்தலைவர் கலைஞர் அவர்களின் கருத்துச் சுருக்கம்

[நாட்டில் அத்தியாவசியப் பண்டங்களின் விலைவாசி உயர்வு குறித்தும், அதற்கு மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக இருப்பது பற்றியும், தமிழகத்தில் கழக அரசு சார்பில் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த இதுவரை மேற்கொண்டுள்ள முயற்சிபற்றியும், கழகத் தலைவரும் தமிழக முதல்வருமான கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தில் தமது உரைகளின்போது குறிப்பிட்ட கருத்துரைகளும், விலைவாசியைக் கட்டுப்படுத்த கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் 27-8-73 அன்று நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளும் அடங்கிய இச்சிறுநூல் தலைமைக் கழகத்தின் பிரச்சாரத்துறை சார்பாக வெளியிடப்படுகிறது.]

—பிரச்சாரத் துறை

தி.மு.க. தலைமை நிலையம்

32027
ஐ 894.811521
Wnn

63.6.3
5368

# யார் பொறுப்பு யார்? யார்?

## விலைவாசி ஏற்றமும் இந்தியாவும்

முதலில் உலகத்திலே விலைவாசி நிலவரத்தில் இந்தியா எங்கேயிருக்கிறது என்று பார்ப்போம். பிறகு இந்தியாவில் தமிழ்நாடு எங்கேயிருக்கிறது என்று பார்ப்போம்.

உலகத்தில் விலைவாசி நிலவரத்தைப் பற்றி 'ஐ எல். ஒ.' என்று சொல்லப்படுகிற இண்டர்நேஷனல் லேபர் ஆர்கனைசேஷன் வெளியிட்டிருக்கிற புள்ளி விவரத்தைப் பார்ப்போம்—1963 மார்ச் முதல் 1972 வரை உலகத்திலே உள்ள விலைவாசி நிலவரங்களை அது வெளியிட்டிருக்கிறது.

தாய்லாந்து 21 சதவீதம்; மொராக்கோ 22 சதவீதம்; கென்யா 25 சதவீதம்; ஈரான் 28 சதவீதம்; எதியோப்பியா 32 சதவீதம்; மெக்சிகோ 35 சதவீதம்; இலங்கை 36 சதவீதம்; பாகிஸ்தான் 45 சதவீதம்; மேற்கு ஜெர்மனி 32 சதவீதம்; கனடா 33 சதவீதம்; அமெரிக்கா 35 சதவீதம்; ஆஸ்திரேலியா 37 சதவீதம்; இத்தாலி 39 சதவீதம்; பிரான்சு 43 சதவீதம்; ஜப்பான் 55 சதவீதம்; இங்கிலாந்து 46 சதவீதம்; இந்தியா 95 சதவீதம். இது ஐ. எல். ஒ. வெளியிட்டிருக்கிற புள்ளி விவரப் பட்டியலாகும்.

இதிலே இந்தியா 95 சதவீதம். எல்லாவற்றிலும் உயர்ந்து நிற்கிறது. அந்த இந்தியாவில் நம்முடைய தமிழ் நாட்டின் நிலவரம் என்ன? பொது விலைக் குறியீடு, உணவுக் குறியீடு (General index, Food index) என்ற இந்த இரண்டையும் எடுத்துக்கொண்டால் மத்திய சர்க்கார் வெளியிட்டிருக்கிற அந்தப் பட்டியலின்படி, ஜூலை 72-ல் இந்தியாவின் பொது விலைக் குறியீடு 205 புள்ளியாக இருக்கும் போது, சென்னையில் 201 புள்ளியாக இருந்திருக்கிறது. அதைப் போலவே உணவு நிலைக்குறியீட்டில் 220 புள்ளியாக இந்தியாவில் இருந்த போது சென்னையில் 205·9 புள்ளியாக இருந்திருக்கிறது. நான் அதிலே அதிக விவரங்களைச் சொல்ல விரும்பவில்லை.

## விலைவாசியும் தமிழ் நாடும்

மே '73-ல் பொதுவிலைக் குறியீடு அகில இந்தியாவிலே 228 புள்ளியாக இருந்தபோது, சென்னையிலே 217 புள்ளியாக இருந்

திருக்கிறது. உணவு நிலைக் குறியீடு அகில இந்தியாவில் 273 புள்ளியாக இருந்தபோது சென்னையில் 224.6 ஆக இருந்திருக்கிறது.

ஆக இந்த விவரப்படி பார்த்தால் சென்னை உணவு நிலைக் குறியீட்டின் நிலை அகில இந்தியாவின் உணவு நிலைக் குறியீட்டை விடக் குறைவாக உள்ளது என்பதை நாம் மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.

அத்தியாவசியப் பொருள்களுடைய மொத்த விலை நிலவரம்—அல்லது சில்லறை விலை நிலவரம் ஆகியவற்றைத் தென் மாநிலங்களைப் பொறுத்தும், ஏனைய வட மாநிலங்களைப் பொறுத்தும் நாம் அறிந்து கொள்ள வேண்டுமேயானுல், அதற்கான விவரங்களை இந்த அவை அறிந்துகொள்ள வேண்டியது அவசியம் என்று நான் கருதுகிறேன்.

அரிசி, நடுத்தர அரிசி, பச்சரிசி, பெங்களூரில் குவிண்டால் ஒன்றுக்கு விலை ரூபாய் 212 (31-7-73 அன்றைய நிலவரப் படி); திருவனந்தபுரத்தில் இதே அரிசி விலை ரூபாய் 380 (4-8 73 அன்றைய நிலவரம்); சென்னையில் 6-8-73 நிலவரப்படி ரூபாய் 133.

புழுங்கல் அரிசி, குவிண்டால், பெங்களூரில் 195 ரூபாய்; திருவனந்தபுரத்தில் 365 ரூபாய்; சென்னையில் 126 ரூபாய்.

சோளம், பெங்களூரில் 139 ரூபாய் திருவனந்தபுரம் 210 ரூபாய்; சென்னை 92 ரூபாய்.

கம்பு; பெங்களூர் 138 ரூபாய்; திருவனந்தபுரம் 226 ரூபாய்; சென்னை 89 ரூபாய்.

கேழ்வரகு, பெங்களூர் 112 ரூபாய்; திருவனந்தபுரம் 205 ரூபாய்; சென்னை 89·75 ரூபாய்.

கடலை, பெங்களூர் 177 ரூபாய் (குறைவு); திருவனந்தபுரம் 235 ரூபாய்; சென்னையில் 202 ரூபாய்.

துவரை, பெங்களூர் 188 ரூபாய்; திருவனந்தபுரம் 210 ரூபாய்; சென்னை 175 ரூபாய்.

பச்சைப் பயிறு, பெங்களூர் 288 ரூபாய்; திருவனந்தபுரம் 323 ரூபாய்; சென்னை 207 ரூபாய்.

தேங்காயெண்ணெய், பெங்களூர் 837 ரூபாய்; திருவனந்தபுரம் 825 ரூபாய்; சென்னையில் அதை விட அதிகம்; இது ஒன்றில், அதாவது 941 ரூபாய்.

உளுந்து, பெங்களூரில் 266 ரூபாய், திருவனந்தபுரம் 335 ரூபாய் ; சென்னை 195 ரூபாய்.

இவை நிலவரங்கள் ; இதிலே மற்ற வடபுறத்து மாநிலங்களோடு ஒப்பிட்டால் சில்லறை விற்பனையிலே பார்த்தால் கூட, சென்னையில் அரிசி விலை ஒரு கிலோ ரூ. 1·22 ; அகமதாபாத் (குஜராத்) 3.25 ; அமிர்தசரஸ் (பஞ்சாப்) 2.00 ; ஜோத்பூர் (ராஜஸ்தான்) 2 25 ; உத்தரப்பிரதேசத்தில் (ஆக்ரா) 1·95 ; சிம்லாவில் 2·60 ; கான்பூர் (உ. பி.) 1.75 ; மேற்கு வங்கத்தில் 2·25 ; இது அரிசியைப் பொறுத்த வரையிலாகும்.

சர்க்கரையைப் பொறுத்தவரை சென்னையில் 3·65. குஜராத் 3·95, பஞ்சாப் 3·85, ராஜஸ்தான் 3·75, சிம்லா 4·00 கான்பூர் 3·60

நல்லெண்ணெய், சென்னையில் 8.50 ; குஜராத் 9·00 ; பஞ்சாப் 8·80 ; ராஜஸ்தான் 8·50 ; சிம்லா 8·50. ஆக்ரா ; 9·25 கான்பூர் 9·50.

இந்தச் சில்லறை விற்பனையைப் பார்த்தாலும், அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல இந்தியாவிலே இருக்கிற எல்லா மாநிலங்களையும் விடத் தமிழ் நாட்டில்தான் விலை அதிகம் என்ற அந்தக் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை அல்லது தவறானவை என்பதை விளக்குவதற்குத்தான் நான் இந்த விவரங்களையெல்லாம் எடுத்துச் சொன்னேன்

அவர்கள் பேசும்போது, மாநில அரசுக்கு அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்தின்கீழ் விலைகளை நிர்ணயம் செய்யும் முழு அதிகாரத்தையும், மத்திய அரசு அளித்திருக்கிறது என்று சொன்னார்கள். மதி அவர்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அந்த அதிகாரங்களை நாம் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்றெல்லாம் இங்கே எடுத்துக் காட்டினார்கள்.

## விலைவாசி ஏற்றத்தில் தமிழகத்தின் பொறுப்பு என்ன ?

மாநில அரசுக்கு உள்ள அதிகாரங்கள் எப்படி வரையறுக்கப் பட்டிருக்கின்றன என்பதை புது டில்லியிலிருந்து 72-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 20-ஆம் தேதி எழுதப்பட்டுள்ள அரசு ஆணையில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள், சில உரிமைகளைக் கொடுத்துவிட்டு.

That such powers shall be exercised by a State Govt. subject to such direction if any as issud by the Central Government in this behalf.

என்று சொல்லிவிட்டு, கீழே ஒரு ஐந்தாறு விவரங்களைத் தருகிறார்கள்.

அவை எவையெவை என்றால், விலைக் கட்டுப்பாடு—உற்பத்திக் கட்டுப்பாடு—கொள்முதல்—போக்குவரத்துக் கண்ட்ரோல் இவைகளுக்கெல்லாம் மத்திய சர்க்காருடைய அதிகாரத்தை, அனுமதியைப் பெறாமல் எதுவும் செய்ய முடியாது என்கிற நிலைமையில் தான் அவைகள் இருக்கின்றன.

விலைவாசிகள் ஏறியிருக்கின்றன. ஆகவே இந்த மந்திரிசபை பதவி விலகவேண்டும்; இது எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து எடுத்து வைக்கப்பட்ட ஒரு வாதம். ஆனால் விலைவாசி எப்படி ஏறுகிறது? விலைவாசி ஏற்றத்திற்கு மாநில அரசு காரணமா? மத்திய அரசு காரணமா? என்ற இந்த கேள்வியை நாம் கேட்டு, அதற்கு ஒரு சரியான பதிலை நாம் வரவழைத்துக் கொள்ள வேண்டுமே அல்லாமல், மாநில அரசு மீது குற்றஞ்சாட்டுவதற்கு இதைத் தவிர வேறு எதுவுமே இல்லை என்ற அளவில் மாநில அரசின்மீது குற்றஞ் சாட்ட இதை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதை நான் நிச்சயமாக விரும்பவில்லை.

மாநில அரசு விலைவாசி உயர்ந்திருப்பதை உணர்ந்திருக்கிறது. நாங்கள் மறுக்கவில்லை. ''அப்படித்தான் உயரும். சினிமாவிற்கு க்யூ நிற்கவில்லையா? அதைப்போல அரிசி வாங்க க்யூ நில்லுங்கள்!'' என்று இந்த அரசில் உள்ள அமைச்சர்கள் யாரும் பேச மாட்டார்கள்.

''சினிமா டிக்கெட் உயரவில்லையா? அந்த டிக்கெட்டை வாங்கிப் படம் பார்க்கவில்லையா? அதைப்போல உணவுப் பண்டங்களுடைய விலையும் உயர்ந்திருக்கிறது. ஆகவே அதை வாங்கிச் சாப்பிடுங்கள்'' என்று அலட்சியப் போக்கில் இந்த அரசில் உள்ள யாரும் பேசுவதற்குத் தயாராக இல்லை

விலைவாசி உயர்ந்திருப்பதை ஒத்துக் கொள்கிறோம். ஆனால் எல்லா மாநிலங்களிலும் இந்தியா முழுவதும் இப்படிப்பட்ட நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது என்பதை நாம் தயவுசெய்து மறந்து விடக் கூடாது.

அதை மறந்துவிட்டு, இந்த மாநில அரசு மீது மாத்திரம் பழி போடுவது சரியானதில்லை என்பதற்காகத்தான் இந்த விவரங்களை நான் எடுத்துக் சொன்னேன்.

உற்பத்தி குறைந்து பணப்புழக்கம் அதிகமானால் விலைகள் ஏறும். அது ஒரு வாதம்.

உற்பத்தி அதிகரிக்கப்பட்டுப் பணப்புழக்கம் கட்டுப்படுத்தப் பட்டால் விலைகள் குறையும். அதுவும் ஒரு வாதம்.

உற்பத்தி என்பது வேளாண்மைத் துறையிலே மட்டும் குறிப் பிடப்படுவதல்ல. தொழில் துறையிலும் தேவை என்பதைக் குறிக் கின்ற வாதம்தான் அந்த வாதம்! வேளாண்மைத் துறையில் அதிக உற்பத்தி செய்யவேண்டுமானால் அந்த உற்பத்திக்குத் தேவையான உரம், டிராக்டர், மற்றும் ஏனைய சாதனங்கள், விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்குக் கிடைக்கவேண்டும்.

இத்தகைய மூலப்பொருள்களை — விவசாய உற்பத்திக்கு அத்தியாவசியமான பொருள்களை விநியோகிக்கிற அதிகாரத்தை யும் அது பற்றிய கொள்கைகளை வகுக்கின்ற உரிமையையும் படைத் திருப்பது யார்? மாநில அரசா? மத்திய அரசா? இந்தக் கேள்விக்கு நாம் பதில் காண வேண்டாமா?

அதேபோல் தொழில் உற்பத்திக்கு வேண்டிய மூலப் பொருள் களை இறக்குமதி செய்கின்ற அல்லது செய்வதற்குரிய லைசென்ஸ் கொடுக்கின்ற அதிகாரமும், தொழில் கொள்கைகளை வகுக்கின்ற அதிகாரமும், இந்தத் தொழில்கள் பொதுத் துறையிலோ அல்லது கூட்டுறவுத் துறையிலோ இருக்க வேண்டுமென்ற முடிவைச் செய் கின்ற அதிகாரமும் மத்திய அரசினுடைய கையிலே இருக்கிறபோது மாநில அரசு விலையைக் கட்டுப்படுத்த முடியவில்லையென்று கூறு வதில் நியாயம் இருக்க முடியுமா என்பதைத் தயவு செய்து எண்ணிப் பார்க்கவேண்டும்

ஆகவே இதிலிருந்து நமக்குத் தெரிகிற உண்மை என்ன வென்றால் உற்பத்தியை நிர்ணயித்து, கட்டுப்படுத்தி பொருளாதார வளர்ச்சிக்குரிய சூழ்நிலையை ஏற்படுத்துகின்ற வாய்ப்பும் அதிகார மும் மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது.

## நாணயப் புழக்கமும் விலைவாசி ஏற்றமும்

நாணயப் புழக்கத்தைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரமும், மத்திய அரசின் கையிலேயே இருக்கிறது.

நாணயப் புழக்கக் கட்டுப்பாடு, உற்பத்திப் பெருக்கத்தைப் பற்றிய கொள்கை, பொருளாதாரக் கொள்கை.

இந்தப் பொருளாதாரக் கொள்கைகளைத் தெளிவாகவும், வெற்றிகரமாகவும் அமல் செய்கின்ற அரசு ஒன்றுதான் விலைவாசி களைக் கட்டுப்படுத்த முடியும்.

எனவே நல்ல பொருளாதாரக் கொள்கை விலைவாசிகளைக் கட்டுப்படுத்தும்; நல்ல நாணயக் கட்டுப்பாடு உள்ள பொருளாதாரக் கொள்கையில் கறுப்புப் பணத்திற்கு இடமே இல்லை என்ற கருத்தைத் தேசிய வளர்ச்சி மாநாடு நடைபெற்ற போதுகூட நான் தமிழக அரசின் சார்பில் எடுத்துக் கூறியிருக்கிறேன்.

இன்றைக்கு ரிசர்வ் வங்கி அவர்களிடம் இருக்கிறது. அது உனக்கு வேண்டுமென்று கேட்கிறாயா என்று யாரும் தயவுசெய்து எண்ணக் கூடாது. நிலைமையைச் சொல்கிறேன். அங்குதான் இருக்கவேண்டும். அவர்களிடம் இருக்கிறது.

தேசிய வங்கிகள் அவர்களிடம் இருக்கிறது. பெரிய வரி விதிப்புக் கருவிகள், ஆயுதங்கள் அவர்களிடத்திலே இருக்கின்றன. நோட்டு அடிக்கிற அச்சு இயந்திரம் அவர்களிடத்திலே இருக்கிறது.

அண்மையில் அந்த அச்சு இயந்திரம் இரவு பகலாக வேலை செய்து கொண்டிருப்பதாகக்கூடப் பத்திரிகையிலே செய்தி பார்த்தோம். அதற்குத் தேவையான காகிதம் கூடக் கிடைக்காமல் வெளிநாடுகளிலிருந்து காகிதம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி கூட இந்துப் பத்திரிகையில் வந்தது. நாம் படித்தோம். அந்த அளவிற்கு அச்சு இயந்திரம் வேகமாக வேலை செய்து கொண்டிருக்கிறது. ஆகவே மத்திய அரசினுடைய பொருளாதாரக் கொள்கையில் நாம் நுணுகி ஆராய வேண்டியவைகளில் ஒன்று, இந்த நாணயத்தைக் கட்டுப்படுத்துகின்ற முறை.

## வரி விதிப்பும் விலைவாசி ஏற்றமும்

அடுத்தது, வரி விதிப்புக் கொள்கையை நாம் ஆராய்ந்து தீர வேண்டும். வரிவிதிப்புக் கொள்கையில் இந்த ஆண்டு மத்திய அரசின் பட்ஜெட் 4,800 கோடி ரூபாய். அதிலே அவர்களுடைய வரிகளில் எக்சைஸ் வரி மூலம் மாத்திரம் திரட்டப்படுவது, 2,741 கோடி ரூபாய் அதாவது பண்டங்களின் உற்பத்தியின்மீது விதிக்கப்படுகிற வரி 56 சதவிகிதம் அதை நாம் மறந்து விடக் கூடாது. அண்மையில் ஓர் ஆராய்ச்சி மூலம் தெரியவந்த கருத்து, சுமார் ஆறு பொருள்களின் விலையில் 50 சதவிகிதம் முதல் 70 சதவிகிதம் வரை எக்சைஸ் வரியாக மத்திய அரசுக்குப் போகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பாமர மனிதன் துணி வாங்குகிறான். இதில் 50 முதல் 75 சதவீதம் வரை எக்சைஸ் டியூட்டி வாங்குகிற துணிக்குத் தகுந்தவாறு போடப்படுகிறது. சர்க்கரை விலையில் 75 சதவிகிதம் எக்சைஸ் டியூட்டி. சிமெண்ட் 60 முதல் 70 சதவிகிதம் வரை

எக்சைஸ் டியூட்டி. ஸ்டீல் 50 முதல் 60 சதவிகிதம் வரை எக்சைஸ் டியூட்டி.

இந்த ஆண்டு மத்திய அரசு நேர்முக வரிகளான வருமான வரி, சொத்து வரி, கம்பெனி வரியான கார்ப்பரேஷன் வரி ஆகிய வற்றை உயர்த்தவில்லை என்பதை நாம் அனைவரும் நன்ருக அறிவோம்.

எக்சைஸ் டியூட்டி, கஸ்டம்ஸ் டியூட்டி இது போன்ற மறை முகமான வரியைத்தான் அவர்கள் உயர்த்தியிருக்கிருர்கள் அதாவது இந்த ஆண்டு கணக்கிட்டுப் பார்த்தால், மொத்த வரி வருமானத்தில் 76 சதவிகிதம் எக்சைஸ் டியூட்டியும், கஸ்டம்ஸ் டியூட்டியும்தான், அவர்களால் விதிக்கப்பட்டிருக்கிறது.

பணக்காரர்கள் தருகிற நேர்முக வரியான வருமான வரி, (Income Tax) கார்ப்பரேஷன் வரி, சொத்து வரி (Wealth Tax) இவைகள் எல்லாம் 24 சதவிகிதம்தான் இந்த ஆண்டு போடப்பட் டிருக்கிறது. இதையும் நாம் மறந்துவிடக் கூடாது. விலைவாசி உயர்விற்கு மத்திய அரசின் இந்த வரிக் கொள்கையும் ஒரு காரணந் தான் என்பதைத் தெளிவுபடுத்தத்தான் இந்த விளக்கத்தை எடுத்துச் சொன்னேன்.

இங்கு சொல்வது மாத்திரமல்ல! 1973 ஜனவரித் திங்கள் 19, 20 ஆகிய நாட்களில் டெல்லிப் பட்டணத்தில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டத்தில் முதலமைச்சர்கள் எல்லாம் கலந்து கொண்டபோது, நான் சொன்னேன்:

"நான் தமிழகத்தின் நிதியமைச்சராக இருக்கிறேன். தமிழகத்தினுடைய அரசின் வருவாயைப் பெருக்க வரி விதிக்க வேண்டிய நிலைமை என்னைப் போல் நிதியமைச்சர்களுக்கு ஏற்படுகிறது. என்னைப் போலவே எல்லா மாநில நிதியமைச்சர் களுக்கும் அந்தப் பொறுப்பு இருக்கிறது. வரியை உயர்த்தினுல் உடனே விலைவாசி உயருகிறது. ஆகவே, இவைகளை எல்லாம் ஆராய்ந்து ஏதாவது ஒரு கட்டத்தில் ஒரு நல்ல முடிவு எடுத்தால் தான், இந்த வரி விதிப்பில் ஒரு நல்ல கொள்கை முடிவு எடுத்தால் தான், விலைவாசி உயர்வுகளைக் கட்டுப்படுத்த முடியும்" என்ற கருத்தை நான் எடுத்துச் சொன்னேன். நான் பேசும் போது குறிப்பிட்டேன்.

"The increase in prices of commodities raises cost of production of goods in general and this has impact on prices which in turn impinches on our wage level and State and Central

resources. We would therefore urge that Government of India should set up a comprehensive Taxation Enquiry Commission took into this whole question and suggest solutions என்று நான் சொன்னேன்.

ஒட்டு மொத்தமான ஒரு வரிக் கொள்கைக்கான ஒரு ஆய்வுக் குழு அமைக்கப்பட்டாக வேண்டும் என்ற கருத்தை நான் தேசிய வளர்ச்சிக்குழு மாநாட்டிலே எல்லா முதலமைச்சர்களுக்கும் முன்பாக இந்தியப் பிரதமர் முன்னிலையில் எடுத்துச் சொன்னேன்

அது நல்ல யோசனை என்று பல மாநில முதலமைச்சர்களால் பாராட்டப்பட்டது. டெல்லியில் உள்ள பத்திரிகைகள் எல்லாம் எழுதின. தமிழ்நாட்டில் உள்ள பத்திரிகைகளும் அதைப்பற்றி எழுதின. மேலவையிலும் சட்டப் பேரவையிலும் அதை வரவேற்று பலர் பேசியதாக எனக்கு நினைவு. ஆனால் இதுவரையில் அதைப் பற்றிய சிந்தனையே மத்திய அரசிலே உள்ளவர்களிடம் எழுந்ததாக எனக்குத் தெரியவில்லை.

உற்பத்தி பெருகினால் விலைவாசி குறையும் என்கிற ஒரு கருத்து உண்மையான கருத்துத்தான். என்றாலும்கூட அது மாத்திரம் போதாது என்பதற்கு ஒரு முன் உதாரணமும் நமக்கிருக்கிறது.

1965-66ல் இந்தியாவின் பிரதமராகத் திருமதி இந்திரா காந்தி அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட நேரத்தில் 72.3 மில்லியன் டன்னிலிருந்து 107.81 மில்லியன் டன்னாக உணவு தானியங்களின் உற்பத்தி இந்தியாவில் உயர்ந்தது. ஆனால் அப்படி உற்பத்தி அதிகரித்தும், விலைவாசி குறைந்ததா என்றால், இல்லை. உணவு தானியங்களின் விலை, குறிப்பாக கோதுமையின் விலை, மேலும் அதிகமாயிற்று; அவ்வளவு உற்பத்திக்குப் பிறகும்! அதற்குக் காரணமென்ன? அதிக உற்பத்தி செய்தால் மாத்திரம் போதாது சரியான பொருளாதாரக் கொள்கை (Monetary Policy) வகுக்கப்பட்டாக வேண்டும் என்பதைத்தான் அது கோடிட்டுக் காட்டுகிறது என்பதை நான் இந்த அவைக்குத் தெளிவாக்கிட விரும்புகின்றேன்.

(Supply and demand) வழங்கலும் தேவையும் என்று எடுத்துக் கொண்டால், விலைவாசியை நிர்ணயிக்கின்ற கர்த்தாக்கள் இரண்டும் சமநிலையில் இருக்கின்றன என்று நாம் வைத்துக் கொண்டு பார்த்தால் கூட, நோட்டு அடித்துக் குவித்துக் கொண்டிருப்போமானால், (Deficit Financing) பற்றுக்குறை நிதிநிலை ஏற்படுகிறது. அப்படிப் பற்றுக்குறை நிதிநிலை ஏற்பட்டால் விளைவு என்ன?

மிக அதிகமான பணப்புழக்கம் மிகக் குறைவான பண்டங்களைத் துரத்திக் கொண்டு போகிறது. அப்படித் துரத்தும் போது

தானகவே விலை உயருகிறது. இதை நாம் நெஞ்சில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

பண்டங்களின் உற்பத்தியைவிடக் கரன்சி நோட்டுகளின் உற்பத்தி இன்று இந்தியாவில் அதிகமாக ஆகியிருக்கிறது என்பதை யாரும் மறுக்க இயலாது. 1966 லிருந்து 1972 வரை இந்தக் காலக் கட்டத்தில் பணப் புழக்கம் (Money supply) இரட்டிப்பாக ஆகியிருக்கிறது.

அதே நேரத்தில் விவசாயப் பண்டங்கள் போன்ற தேசிய ஆதாரப் பண்டங்களின் (National product of primary goods) உற்பத்தி 52 கோடி ரூபாயிலிருந்து 40 கோடி ரூபாய்க்குக் குறைந்திருக்கிறது. நோட்டு அடிப்பது, பணப்புழக்கம் இரட்டிப்பாக உயர்ந்திருக்கிறது. ஆனல் உற்பத்தி, தேசியப் பண்டங்களின் உற்பத்தி, 52 கோடியிலிருந்து 40 கோடி ரூபாயாகக் குறைந்துவிட்டிருக்கிறது.

எனவே பண்டங்களின் உற்பத்திக்கும், அதிகமாக நோட்டு அடித்துக் குவித்தால் விலை உயருமா உயராதா என்ற கேள்விக்கும் நாம் பதில் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம்.

1972 ஏப்ரல் 8-ஆம் தேதி 8,247 கோடியாக இருந்த பணப் புழக்கம், 1973 ஏப்ரல் 27-ஆம் தேதி 9,545 கோடியாக உயர்ந்திருக்கிறது. அதாவது 16 சதவிகிதம் பணப்புழக்கம் உயர்ந்திருக்கிறது.

இதை எல்லாம் கருதித்தான் அறிஞர் அண்ணா அவர்கள் "நாட்டு வாட்டம் போக்கிட, நோட்டடித்தால் போதாது" என்று அன்றைக்கே தன்னுடைய தேர்தல் பிரகடனத்தைச் செய்தார்கள். அப்போது நாட்டு, நோட்டு என்று அடுக்குச் சொல் எழுதுகிறார் அண்ணா என்று சிலர் கேலி செய்தார்கள். கிண்டல் செய்தார்கள். ஆனல் இன்று அது எவ்வளவு பொருத்தம் என்பதை மக்களுக்கு, உலகத்திற்கு, விளக்கிக் கொண்டிருக்கிறது.

விலைவாசி உயர்ந்துவிட்டது என்று கூறி அன்று நாங்கள் மாநில சர்க்காரை எதிர்த்துப் போராட்டம் நடத்தவில்லையா என்று கேட்டார்கள். நடத்தினேம்.

ஏனென்றல், அப்போது மத்திய சர்க்காரிலும், மாநில சர்க்காரிலும் ஒரே கட்சி ஆட்சி நடைபெற்றது. அப்போது இருந்த அமைச்சர்கள் மத்திய அரசைப் பற்றிச் சொல்கிற துணிவு இல்லாமல் இருந்தார்கள்.

இன்று என்ன என்ருல், ஒரு தராசை எடுத்துக்கொண்டால், அந்தத் தராசின் இரண்டு தட்டுகளில் ஒன்றில் உற்பத்தி நிலைமை யையும், இன்னொரு தட்டில் கரன்சி நோட்டையும் வைத்துப் பார்க் கிருேம். என வைத்துக்கொள்வோம். கரன்சி நோட்டை அதிகமாக அடித்து, உற்பத்தித் தட்டைப் பெருக்காமல் விட்டுவிட்டு, முள்ளைப் பிடித்துக் கொண்டிருக்கிற நம்மைப் பார்த்து "ஒழுங்காகப் பிடிக்க வில்லை" என்ருல் என்ன வேடிக்கை! தராசு சமமாக இருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு மத்திய அரசிடம் இருக் கிறது. "முள் ஆடுகிறதே" என்ருல் அது மாநில அரசின் குற்ற மல்ல.

இங்கிலாந்து நாட்டில் "பிரைஸ் போர்டு" என்று ஒன்று அமைக்க வேண்டுமென்று ஒரு யோசனை கூறப்பட்டு, அது அமைக்கப்பட்டு, அதனுடைய அனுமதி பெற்றுத்தான் பலரும் விலையை நிர்ணயம் செய்ய முடியும்; உயர்த்த முடியும் என்ற ஒரு நிலைமை இருப்பதைச் சுட்டிக் காட்டி, திரு அனுமந்தையா தலைமையில் அமைந்த ஏ. ஆர். சி. நிர்வாகச் சீர்திருத்தக் குழு இந்திய அரசுக்கு ஒரு சிபாரிசு செய்தது. கமிஷன் ஆன் பிரைசஸ், காஸ்ட்ஸ் அண்டு டாரிப்ஸ் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டு, அதன் அனுமதி பெற்றுத் தான் ஆலையில் உற்பத்தியாகிற பண்டங்களின் விலையும், கச்சாப் பொருள்களின் விலையும் உயர்த்தப் பட வேண்டும் என்று நிர்வாகச் சீர்திருத்தக்குழு மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்தது. அந்தச் சிபாரிசு செய்து எவ்வளவு நாளாகிறது? இதுவரை மத்திய அரசு அதைப்பற்றி யோசனை செய்ததா என்ருல், இல்லை.

இந்தச் சூழ்நிலையில்தான் நாம் விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் மத்திய அரசுதான். மாநில அரசு அல்ல என்று சொல்லு கிருேம் இந்த எண்ணத்தைத் தமிழ்நாட்டின் அரசின் சார்பில் நாங்கள் மாத்திரம் சொல்லுகிருேமா என்ருல், இல்லை! இந்தியாவில் இருக்கிற எல்லா மாநில அரசுகளும் சொல்கின்றன.

இங்கே நம்மைப் பார்த்துக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும், மாநில அரசுதான் காரணம் என்று சொல்லுகிற அதே நேரத்தில், நான் அவர்களுக்குக் கேரள அரசைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். கேரளத்திலே என்னுடைய பெருமதிப் பிற்குரிய நண்பர் அச்சுதமேனன் அவர்கள் முதலமைச்சராக இருக்கிருர்கள். அவர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். (C P.I.) அங்கே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மாநில சர்க்கார் விலைவாசி ஏற்றத்திற்குக் காரணமல்ல. மத்திய அரசு தான் காரணம் என்று போர்க்கொடி உயர்த்துகிற காட்சியை

அங்கே காண்கிறோம். பந்த் நடைபெறுகிறது. 1,200 பேர் சிறையில் அடைபடுகிறார்கள். துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு பேரும், தனியாக ஒருவரும் கொல்லப்படுகிறார்கள். இவைகள் எல்லாம் கேரளத்தில், சென்ற வாரம் நடைபெறுகிற நிகழ்ச்சிகள்.

என்ன காரணம்? விலைவாசி ஏற்றம், உணவுப் பற்றுக்குறை, பஞ்சம் வறுமை, வறட்சி இவைகளுக்குக் காரணம் மாநில அரசல்ல மத்திய அரசு என்று அங்கிருக்கின்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (சி.பி.ஐ.) போர்க்கொடி தூக்குகிற காட்சியை அங்குப் பார்க்கிறோம். அதற்கு ஆளும் காங்கிரஸ் கட்சிச் செயலாளர் சொல்கிறார். "நீங்கள் முயல் போலவும் ஓடுகிறீர்கள்; வேட்டை நாய் போலவும் துரத்துகிறீர்கள்; பிள்ளையையும் கிள்ளி விட்டுத், தொட்டிலையும் ஆட்டுகிறீர்கள்" என்று அங்கிருக்கின்ற இந்திரா காங்கிரஸ்—ஆளுங் காங்கிரஸ் கட்சியினுடைய செயலாளர் அங்கிருக்கின்ற சி பி.ஐ. கம்யூனிஸ்ட் கட்சியைப் பார்த்துக் குறை கூறுகிறார். ஆகவே ஆளுகின்ற கட்சியாக இருக்கின்ற சி.பி.ஐ. கட்சியே கூட, மாநில அரசல்ல இதற்குக் காரணம், மத்திய அரசுதான் காரணம் என்று மத்திய அரசைச் சுட்டிக் காட்டுகின்றது.

அதைப் போலவே கடந்த வாரத்தில் டெல்லியில் நடைபெற்ற ஒன்பது கட்சிகள் கொண்ட கூட்டத்தில்—பழைய காங்கிரஸ் கட்சி, இங்கே இந்த அமைச்சரவைமீது விலைவாசி உயர்விற்க க நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிற சுதந்திராக் கட்சி, இந்தக் கட்சிகள் எல்லாம்கூடி, விலைவாசி உயர்வுக்கு மத்திய அரசு தான் காரணம் என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். கிருபளானி அவர்களுடைய தலைமையில் பழைய காங்கிரஸ் கட்சி, தி மு. கழகம். சுதந்திராக் கட்சி, சோசலிஸ்ட் கட்சி. முஸ்லிம் லீக் மற்ற கட்சிகள் எல்லாம் கூடி, ஒரு தீர்மானம் நிறைவேற்றி, வருகிற 26-ஆம் தேதி ஒருமுனையாக இந்தியா முழுவதும் மத்திய அரசைக் கண்டித்துக் கூட்டங்கள் நடத்த வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியிருப்பதை நாம் காண்கிறோம். ஆகவே, இதுகூட மத்திய அரசுதான் அதற்குக் காரணம் என்பதைப் புலப்படுத்தவில்லையா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

மாநில அரசு இதற்குக் காரணம் கூறுகின்ற எதிர்க் கட்சிக்காரர்களுக்குப் பதிலளிக்கும் வகையில் கேரள மாநிலத்தில் நடைபெறுகின்ற கிளர்ச்சியும், டெல்லியிலே நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தின் தீர்மானமும் இதற்கு முக்கிய எடுத்துக் காட்டாக இருக்கிறது.

இவைகளுக்கு எல்லாம் முத்தாய்ப்பு வைப்பதைப்போல் ஏ. ஆர். சி. கமிட்டி இருக்கிறதே—நிர்வாகச் சீர்திருத்தக்குழு இருக்

கிறதே—அதில் யார் யார்? நம்முடைய அனுமந்தையா தலைவர்—நம்முடைய முன்னாள் முதல்வர் பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்குக்கூட அதில ஈடுபாடு உண்டு. அவர்கள் அத்தனை பேரும் சேர்ந்து தயாரித்த அந்த ஏ. ஆர். சி. ரிப்போர்ட் Centre-State Relation என்கின்ற அந்த ரிப்போர்ட்டில் சொல்கிறார்கள்.

In fact it is the policies of the Central govt. that are responsible for inflation and increase in prices and the cost of living என்று மத்திய அரசைக் குறை கூறித்தான் இது மத்திய அரசின் பொறுப்பு என்று தான் ஏ. ஆர். சி. சுட்டிக்காட்டியிருப்பதையும் நாம் காணுகின்றோம்.

இன்றைக்கு இந்தியாவிலேயே அமைதியாகத் திட்டங்களை ஒழுங்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிற, வறட்சி நிவாரணப் பணிகளைச் சரிவரச் செய்து கொண்டிருக்கிற மாநிலம் தமிழ்நாடு தான்.

உணவு நிலைமையிலே தன்னிறைவு கொண்டிருக்கிற மாநிலமும் தமிழ்நாடு தான் என்கின்ற ஒரு பாராட்டுரையைச் சென்ற சில மாதங்களுக்கு முன்பு டெல்லியிலிருந்து ஏழெட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்கள், பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள், அவர்களாகவே ஒரு குழு அமைத்து, இந்தியா முழுவதும் சுற்றிப் பார்த்து, தென்னக மாநிலங்களையும் சுற்றிப் பார்த்து விட்டுச் செல்லும் போது, செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார்கள்.

அதுபோது அக் குழுவின் தலைவராக வந்த மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர் ஜோதிர்மாய்பாசு ஒன்று சொல்லியிருக்கிறார். அது விவரம், ஜூலை 30-ல் வெளியான 'டைம்ஸ் ஆப் இண்டியா' ஏட்டிலே வந்துள்ளது

அதில் அவர் கூறியிருக்கிறார். "பசுமைப் புரட்சிக்குப் பதிலாக வறட்சிப் புரட்சி நாடெங்கும் பல பகுதிகளில் நிலவி வருகிறது. இந்த வறண்ட பகுதிகளில், உத்தரப் பிரதேசம், பிகார், ராஜஸ்தான், ஆந்திரம் ஆகிய பகுதிகளில், 50 சதவீதத்துக்கு மேலாக வறட்சி நிவாரண வேலைகள் நடைபெறவில்லை.

திட்டத்துக்கு மேலாக உற்பத்தி செய்து பஞ்ச நிவாரண வேலைகளை முழுமையும் கடைப்பிடித்து வரும் ஒரே மாநிலம் தமிழ்நாடு தான்" என்று கூறியிருக்கிறார்.

இன்னும் விலைவாசியைச் சரிப்படுத்த-உணவு நிலையைச் சரிப்படுத்த, இந்த அரசு தவறி விட்டதற்குக் காரணங்களைச் சொல்லும்

பொழுது நம்முடைய பெரியவர் மணலி அவர்கள் கூடச் சொன்னூர் கள்—கள்ளக் கடத்தல்காரர்களை எல்லாம் பிடிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். நமது மதி அவர்களும் குறிப்பிட்டார்கள். கள்ளக்கடத்தல்காரர்கள் பிடிபட்டதற்குப் பாராட்டுகிறோம்; மகிழ்ச்சி தெரிவிக்கிறோம் என்று கூடச் சொன்னூர்கள். இதுவரை யில் கோவையில் 13 பேரும் கன்னியாகுமரி மாவட்டத்தில் 3 பேரும் ஆக 16 பேர்கள் இன்றைக்குப் பாதுகாப்புச் சட்டப்படிப் பிடிக்கப் பட்டிருக்கிறூர்கள். இதற்கு முன்பே ஏன் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தியிருக்கக் கூடாது என்று கேள்வி எழுந்தது.

இந்தியாவிலேயே பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்திப் பதுக்கல்காரர்களையும். கள்ளக்கடத்தல்காரர்களையும் பிடித்திருக்கிற மாநிலம் தமிழ்நாடு ஒன்று தான் என்று நான் கருதுகிறேன். வேறு மாநிலங்களும் இருக்கக் கூடும். சொன்னூல் நான் திருத்திக் கொள் கிறேன்.

இங்கே 16 பேர்கள் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப் பட்டிருக்கிறூர்கள். நான் இன்னும் உறுதியாகத் தெரிவித்துக் கொள் வேன் மணலி அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இந்த அரசு மேலும் பலபேரை, அவர்கள் நூற்றுக் கணக்கில் இருந்தாலும் அவர்களை எல்லாம் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் பிடித்து, அவர்களைச் சிறை யில் போட இந்த அரசு நிச்சயமாகத் தயங்காது, தயங்காது. இவர் களை விடச் சமுதாயத் துரோகிகள் இப்படிப்பட்ட நேரத்தில் வேறு யாரும் இருக்க முடியாது.

## கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் 27-8-73 அன்று சென்னையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் ஒரே மனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சீர்குலைவு, விலைவாசி ஏற்றக் கொடுமை பற்றி இன்று கூடிய அனைத்துக் கட்சித் தலை வர்கள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

மத்திய அரசு பின்பற்றி வரும் பொருளாதாரக் கொள்கை, நோட்டடிக்கும் கொள்கை, பண வீக்கம், பற்றுக்குறை நிதி நிலைத் திட்டம், கட்டுக்கடங்காத கருப்புப் பணப் பெருக்கம் இவை களின் மொத்த விளைவாக மக்கள் தாங்கொண்ணூத அளவிற்கு நாட்டில் விலைவாசி ஏற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்தக் காரணங்களை எடுத்துக் கூறி மாநில அரசும் அரசியல் கட்சித் தலைவர்களும் விலைவாசியைக் கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி வந்திருக்கின்றார்கள். இந்தியாவின் பெரும்பான்மையான மாநிலங்களில் பருவ மழை தவறியதால் தொடர்ந்து ஏற்பட்ட வறட்சி நிலையும் உணவு உற்பத்தியை மிகவும் பாதித்துள்ளது. பாகிஸ்தான் நாட்டோடு ஏற்பட்ட போரும், வங்க நாட்டு அகதிகளின் பிரச்சனையும் நாட்டின் பொருளாதாரச் சீர்குலைவை அதிகப்படுத்தியது.

கடந்த பத்து ஆண்டுகளாக உலக நாடுகளில் ஏற்பட்ட விலைவாசி ஏற்றத்தில் இந்திய நாட்டில்தான் மிக அதிகமாக விலைவாசிப்புள்ளி ஏறி வந்துள்ளது. ஆனால் இந்தியாவில் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது தமிழகத்தில் விலைவாசிப்புள்ளி குறைந்தே இருந்துவந்துள்ளது. உணவுப் பொருள்களின் விலை குறிப்பாக அரிசியின் விலை தமிழகத்தில் பெரிதும் அதிகரிக்காமல் இருந்து வந்துள்ளது.

தமிழகம் அரிசியைப் பொறுத்தவரை தனிப்பகுதியாக விளங்கி அரிசி நடமாட்டம் கட்டுப்படுத்தப்படுவதால் அரிசி விலை ஏற்றத்தை தமிழக அரசு கட்டுப்படுத்த முடிந்துள்ளது. மற்ற உணவுப் பொருள்கள், இந்தியா முழுதும் கட்டுப்பாடு இல்லாமல் எடுத்துச் செல்லப்படுவதால் மற்ற மாநிலங்களில் ஏற்பட்ட வறட்சி உணவு உற்பத்திக் குறைவு ஆகியவற்றால் ஏற்பட்ட நிலைமை! தமிழகத்திலும் விலைகளை கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலைக்கு ஆளாக்கி விட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள உணவுப் பற்றுக்குறையை முன் கூட்டியே உணர்ந்து உணவு தானிய இறக்குமதி ஏற்றுமதிக் கொள்கைகளை மத்திய அரசு வகுத்திடத் தவறி விட்டது. உதாரணத்திற்கு கடலை எண்ணெய் விலை இருமடங்காக ஏறியிருந்தும் அண்மையில் பம்பாய் துறைமுகத்திலிருந்து கடலை ஏற்றுமதிக்கு மத்திய அரசு அனுமதித்திருந்ததை தொழிலாளர் சுட்டிக்காட்டினர். அதுபோல் குறித்த காலத்தில் உணவு இறக்குமதி செய்யாமல் உணவுப் பஞ்சம் ஏற்பட்ட பிறகு வெளிநாடுகளில் உணவு தானியங்கள் வாங்க மத்திய அரசு முயன்றதால் உலகச் சந்தையில் அதிக விலை கொடுத்து கோதுமை வாங்க வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது.

மத்திய அரசுக்கு ஏற்பட்ட நிதிப் பற்றுக்குறையைச் சரிக்கட்ட பணப்புழக்கத்தின் வரையறுக்கப்பட்ட வரம்புவிதிகளை மீறி மிக அதிக அளவிற்கு மத்திய அரசு நோட்டடித்து நாணயப்

புழக்கம் கட்டுக்கடங்காத அளவிற்குப் பெருகியது. அத்தோடு பல்லாயிரம் கோடி ரூபாய் அளவிற்கு கணக்கில் வராத கருப்புப் பணம் புழக்கத்தில் வந்து பொருளாதார சீர்குலைவை ஏற்படுத்தியது. அதிக உற்பத்தி செய்தால் மட்டும் போதாது. சரியான பொருளாதாரக் கொள்கை நாணயப் புழக்கக் கொள்கை பின்பற்றப்பட வேண்டும் என்பது தெளிவாகின்றது.

இந்திய நாட்டின் பொருளாதாரத்தில் கணக்கில் காட்டாத கருப்புப் பணம் பெரும் தீய சக்தியாக அமைந்துள்ளது. கருப்புப் பணத்தை வெளிக்கொணர 'வாஞ்சூ' (Wanchu) குழு செய்த பரிந்துரைகளை மத்திய அரசு நிறைவேற்றாமல் காலம் கடத்தி வருவது வருந்தத்தக்கது. இந்த நிலையைச் சுட்டிக்காட்டி 'வாஞ்சூ' குழுவின் அத்தகைய சிபார்சுகளை உடனடியாக அமுல் நடத்தவும், கருப்புப் பணத்தை வெளிக் கொணர்வதற்கு நடவடிக்கைகள் எடுக்க மத்திய அரசுக்கு உள்ள அதிகாரத்தை அன்னியில் மாநில அரசுகளுக்கும் தேவையான அதிகாரம் வழங்கவும் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டு தமிழக சட்ட மன்றத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் மத்திய அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காதிருப்பது வருந்தத்தக்கது. இந்த நிலை மேலும் நீடிக்காமல் மேலே விவரித்துள்ள பொருளாதாரக் கொள்கைகளை ஆலோசித்து விலைவாசி ஏற்றத்தைத் தடுத்து நிறுத்த விரைவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். என்று மத்திய அரசை இந்த அணைத்துக்கட்சிக் குழு வலியுறுத்துகிறது.

2. தமிழகத்தைப் பொறுத்த வரையில் மாநில அரசு விலைவாசியைக் கட்டுப்படுத்த இதுவரை எடுத்துக் கொண்ட முயற்சிகளோடு மேலும் விலைவாசிகளைக் குறைப்பதற்கு மாநில அரசின் அதிகாரத்திற்குட்பட்ட அளவில் ஏற்ற நடவடிக்கை எடுப்பதோடு அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் மீதுள்ள விற்பனை வரிகளில் மாற்றம் செய்வது போன்ற முடிவுகளைச் செய்ய வேண்டுமென்றும் பதுக்கல், கள்ளக் கடத்தல்காரர்களின் மீது இப்பொழுது எடுக்கப்படும் தீவிர நடவடிக்கைகளைத் தொடர்ந்து செய்திட வேண்டுமென்றும் தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறது.

3. மேற்கண்ட நிலவரங்களை பொதுமக்களுக்கு விளக்கவும் மத்திய அரசின் பொறுப்புக்களை மத்திய அரசு உணர்ந்து தீவிர நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்தும் தீர்மானத்தை நிறைவேற்றியும் வருகிற செப்டம்பர் 9-ஆம் தேதியன்று தமிழ் நாடெங்கும் அணைத்

துக் கட்சியினர் கலந்து கொள்ளும் விலைவாசி உயர்வு கண்டனக் கூட்டங்கள் நடத்துவதென்று தீர்மானிக்கப்படுகிறது.

## கலந்துகொண்ட கட்சிகளும், பிரதிநிதிகளும்

| | |
|---|---|
| தி.மு.க. | கழகத்தலைவர் கலைஞர் பொதுச் செயலாளர் நாவலர், அமைச்சர்கள் பேராசிரியர் அன்பழகன், மாதவன், மன்னை, ராசாராம், தலைமைக் கழகத்தின் துணைச் செயலாளர்கள். |
| முஸ்லீம் லீக் | திரு. அப்துல் வகாப், எம்.எல் சி. திரு. சிலார்மியான், எம்.சி. |
| பார்வர்ட் பிளாக் | திரு. மூக்கையாதேவர், எம்.பி. திரு. ஏ.ஆர். பெருமாள், எம்.எல்.ஏ. |
| சுதந்திரா | திரு. ஸ்ரீ குமார் |
| தி.க. | திரு. வீரமணி, எம்.ஏ.,பி.எல். |
| தமிழரசுக் கழகம் | திரு. பட்சி ராசகோபாலன் |
| ஜனசங்கம் | திரு. அ.ப. தாஸ், நாராயணராவ் |
| தமிழ்நாடு குடியரசுக் கட்சி | மாநிலச் செயலாளர் திரு. சுந்தரேசன், சென்னை மாவட்டச் செயலாளர் திரு. எம். சுப்பிரமணியன். |

தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் மணலி கந்தசாமி 'விலைவாசி உயர்வைத் தக்க முறையில் தடுத்து நிறுத்தும் முடிவுகள் எடுப்பதை வரவேற்கிறேன். கூட்டத்தில் கலந்து கொள்ள இயலாமைக்கு வருந்துகிறேன்' என்று தந்தி மூலம் செய்தி அனுப்பியிருந்தார்.

சர்வ கட்சிக் கூட்ட முடிவுகளை ஏற்றுக்கொள்வதாக தமிழ்நாடு உழைப்பாளர் பொதுநலக் கட்சியின் தலைவர் எஸ்.எஸ். ராமசாமி படையாட்சி தெரிவித்திருக்கிறார்.

பழைய காங்கிரஸ் கட்சி வர இயலாமைக்கு வருந்துகிறோம் என்றும், பத்திரிகைகளில் அவர்கள் அவர்களுடைய நிலையை அறிவித்தற்கு இணங்க வர இயலாது என்றும் தெரிவித்திருந்தார்கள்.

# விலைவாசியைக் கட்டுப்படுத்த தமிழக அரசின் துரித நடவடிக்கை

அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்ற மறுநாளன்றே, மக்கள் அன்றாடம் பயன் படுத்தும் மிக இன்றியமையா உணவுப் பொருள்களின் விலைவாசியைக் கட்டுப்படுத்த தமிழக அரசு தீவிர நடவடிக்கை எடுத்தது. இதன்படி பருப்பு வகைகளின் மீதான விற்பனை வரியை ரத்து செய்தும், எண்ணெய் வகைகளின் மீதான விற்பனை வரியில் சலுகை அளித்தும் அரசு ஆணை பிறப்பித்தது.

இது குறித்து தொழில் அமைச்சர் மாதவன் இன்று செய்தியாளர்களிடம் கூறியதாவது :

விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கான விற்பனை வரிச் சலுகை அளிப்பதோடு அநியாய விலையில் விற்கும் வியாபாரிகள் மீது பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யும் நடவடிக்கை எடுக்க அரசு முடிவு செய்துள்ளது.

எல்லாவகையான பருப்பு வகைகள் மீதும் மூன்றரை சதவீதத்தில் இரு முனை விற்பனை வரி (7 சதவீதம்) இப்போது விதிக்கப் படுகிறது. அந்த வரி விதிப்பை ரத்து செய்வது என அரசு தீர்மானித்திருக்கிறது.

அதே போன்று கடலை எண்ணெய்க்கு தற்போது மூன்றரை சதவீதம் இருமுனை வரி விதிக்கப்படுகிறது. அதற்குப் பதிலாக ஒரு முனை வரி மட்டும் மூன்றரை சதவீதம் வரி விதிக்கப்படும். இது உடனே அமுலுக்கு வருகிறது.

அதன் பிறகு நிலைமையை அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

வியாபாரிகள் தங்கள் கடைகளில் கீழ்க்கண்ட இன்றியமையா உணவுப் பொருள்களின் வாங்கிய விலை, விற்பனை விலை, மொத்தக் கையிருப்பு ஆகிய விபரங்களைத் தெளிவாக எழுதி எல்லோருக்கும் தெரியும்படியாக வைக்க வேண்டும்.

அரிசி, நெல், கோதுமை, கம்பு, சோளம், கேழ்வரகு போன்ற உணவு தான்யங்கள் பருப்பு வகைகள், எண்ணெய், புளி, வற்றல், விறகு, அடுப்புக்கரி, லீக்கோ கரி, மண்ணெண்ணெய், குழந்தை உணவு.

மேற்கண்ட பொருட்களின் விலைப் பட்டியல் ஒழுங்காக வைக்கப்பட்டிருக்கிறதா என்று அதிகாரிகள் திடீர் சோதனை நடத்துவார்கள்.

விலைப் பட்டியல் வைக்காவிட்டால், பொருள்களைக் கைப்பற்றி அவர்கள் மீது பாதுகாப்புச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். அதன்படி ஒருவருக்கு ஏழாண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் சட்டப்படி இந்தச் சலுகைகள், பாதுகாப்புச் சட்டப்படியான நடவடிக்கை ஆகியவற்றின் மூலம் இன்றியமையாப் பொருள்களின் விலைவாசி குறையும்.

இந்த உத்தரவு இன்று முதல் தமிழகமெங்கும் அமுலாகிறது. எந்த வியாபாரியும் தம்மிடமுள்ள இன்றியமையாப் பொருள்களை மக்களுக்கு விற்க மறுக்கக்கூடாது; மறுத்தால் பாதுகாப்புச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.